செ.வெ.எண்.36 நாள்.22.01.2018

**காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்தில் புதிய முறையில் வருவாய் நிர்வாக ஆணையர் டாக்டர்.கே.சத்தியகோபால் இ.ஆ.ப.,அவர்கள் மரக்கன்றுகளை நட்டார். மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் உடனிருந்தார்**

மரக்கன்று மற்றும் பழமரக்கன்றுகள் நடவு செய்யும் போது அவற்றிற்கு தேவையான குழிகள் அமைத்து எரு, செம்மண் இட்டு நடவு செய்து பாசனம் செய்யப்படுகிறது. மானவாரியாகவும், சொட்டுநீர் பாசனம் மற்றும் நேரடியாக நீர் ஊற்றுவது போன்ற முறைகளை பயன்படுத்தி வருகிறோம்.

நீரை சிக்கனப்படுத்தவும், வறட்சி காலங்களில் மரக்கன்று வறட்சியை தாங்கி வளரவும் மழைநீர் மற்றும் பாசன நீர் மரக்கன்றின் வேருக்கு நேரடியாக செல்லும் விதமான புதிய மரக்கன்று நடவு முறையை Dr.கே.சத்தியகோபால், முதன்மை செயலாளர் / வருவாய் நிர்வாக ஆணையர், அவர்கள் கண்டுபிடித்து வழங்கியுள்ளார்கள். இதன் மூலம் மரக்கன்று நடவு செய்யும் போது, குழிகள் அமைத்து எரு, மணல், மண்புழு உரம், இயற்கை உரங்கள் இவற்றை PVC Pipe களால் அமைக்கப்பட்ட செங்குத்தான வடிவில் உரம் மற்றும் மணல் இடப்பட்டு செடிகள் நடப்படுகின்றன. இதன் மூலம் பாசன நீர் மற்றும் மழைநீர் நேரடியாக வேர் பகுதிக்கு செல்வதால், நீரின் தேவை அளவு குறைவதுடன் மண்ணுக்குள் வேர் பகுதியில் உயிரியல் செயல்பாடுகள் தொடர்ந்து நடைபெற்று கொண்டிருக்கும். எனவே, வழக்கமான முறையில் நடப்பட்ட கன்றுகளை விட இம்முறையில் நடப்படும் கன்றுகள் வேகமாக வளர்வதுடன் அதிக பலன் தந்து வறட்சியினை தாங்கி நிற்கும். இம்முறையில் காஞ்சிபுரம், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்தில் முதன்மை செயலாளர் / வருவாய் நிர்வாக ஆணையர் அவர்கள் மரக்கன்றுகளை நட்டார்.மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் உடனிருந்தார்.

செய்தி வெளியீடு,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.